[1994 ஏப்ரல் 29

நேராகப் போய்ப் பார்த்தேன். பல இடங்களை பொதுப்பணித்துறையோடு சேர்ந்து போய்ப் பார்த்து, அதைச் சீர்செய்யவேண்டும் என்ற முயற்சியை எடுத்து, அதிலே மிகப் பெரிய கஷ்டத்தை நாங்கள் சந்தித்துக் கொண்டிருக்கிறோம். அதோடு அங்கேயுள்ள பைப் லைன்கள், மற்றும் எலக்ட்ரிக்கல் லைன்கள், இவைகள் எல்லாம், பல நூறு ஆண்டுக்காலத்திற்கு முன்னாலே போட்ட காரணத்தாலே இப்போது மிகப் பெரிய சிரமத்திற்கு நாம் ஆளாகி இருக்கிறோம். அந்தச் சிரமங்களை எல்லாம் சரி செய்வதற்கு மிகப் பெரிய அளவிலே நிதி தேவைப்படுகிறது. இப்போது இருக்கிற குறைந்த நிதியை வைத்துக் கொண்டு ஓரளவிற்கு அதைச் சீர் செய்ய நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 445, திரு. வி. ரவிச்சந்திரன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**445—**

**பச்சைமலை மணலோடை—நாவூர் வரை சிறுபேருந்து இயக்குதல்**

*** 23301**— *திரு. வி. ரவிச்சந்திரன்:*

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உப்பிலியாபுரம் தொகுதி, பச்சைமலை மணலோடையிலிருந்து நாவூர் வரை தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழக சிறுபேருந்து இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் இயக்கப்படும்?

**மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சாலை அமைக்கும் பணி முடிந்ததும் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**திரு. வி. ரவிச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் நல்லாட்சியில் உப்பிலியாபுரம் தொகுதி, பச்சைமலை மணலோடையிலிருந்து நாவூர் வரை தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழக சிறுபேருந்து இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

1994 ஏப்ரல் 29]

**மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் சொன்னேன். அந்தப் பாதையை சீரமைத்தவுடனே - அந்தப் பணிகளை நாங்கள் மேற்கொள்வதாக சொல்லியிருக்கிறேன் - பாதை சீரமைத்த அடுத்து நாளிலிருந்து அந்தப் பேருந்துகள் அங்கே இயக்கப்படும்.

**திரு. வி. ரவிச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் பஸ் இயக்கப்படும் என்று கூறியதற்கு உப்பிலியாபுரம் தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 446, திரு. கே. முனிவெங்கடப்பன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**446—**

### கிருட்டிணகிரியில் அன்னை சத்தியா போக்குவரத்துக்கழகத் தொழிலாளர்களுக்கு குடியிருப்பு இல்லங்கள் கட்டுதல்

*** 24497**—திரு. கே. முனிவெங்கடப்பன்:

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருட்டிணகிரி நகரில் அன்னை சத்யா போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கு குடியிருப்பு இல்லங்கள் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும்?

**மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்; போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : கிருட்டிணகிரி பகுதியில் வீடுகட்ட வேண்டிய பணியாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் ஏதும் வரவில்லை. அவ்வாறு வந்தால் அது பரிசீலிக்கப்படும்.

முற்பகல் 10-30

**திரு. கே. முனிவெங்கடப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம், புரட்சித் தலைவி அவர்கள் தமிழ்நாட்டில் இருக்கின்ற அத்தனை குடும்பங்களுக்கும் வீடுகள் கட்டிக்